# Sample Question paper (Tamil )

மாதிரி வினாத்தாள் - தமிழ்
பத்தாம் வகுப்பு (Class - X )
ஏப்ரல் 2012 - செப்டம்பர் 2012
**I - TERM (April 2012 - SEP 2012)**

Max. Marks : 90
மொ.மதிப்பெண் கள்: 90

Time Allowed : 3 Hours
கால அளவு : 3 மணி

The question paper is diveded into four sections:
**இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | |
|---|---|---|
| **SECTION : A** | Reading comprehension | - 15 Marks |
| பிரிவு: அ | படித்தல் (உரைநடைப் பகுதி) | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : B** | **Writing** | - 20 Marks |
| பிரிவு: ஆ | எழுதுதல் | -20 மதிப்பெண்கள் |
| **SECTION : C** | Grammar | - 15 Marks |
| பிரிவு: இ | இலக்கணம் | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : D** | **Literature / Text Books** | - 40 Marks |
| பிரிவு: ஈ | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | -40 மதிப்பெண்கள் |

---

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.
★ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன.

**பிரிவு - அ (section A, 15 marks)**
படித்தல் - 15 மதிப்பெண்

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

சங்க காலத்தில் திணைவகை இலக்கியம் தோன்றியது. சங்கம் மருவிய காலத்தில் நீதி இலக்கியம் தோன்றி செல்வாக்குப் பெற்றது. அதன்

பின்னர் பக்தி இலக்கிய வகை வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. அதனைத் தொடர்ந்து சிற்றிலக்கிய வகை தோற்றம் பெற்றது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பிய வகை இலக்கியம், சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்றது. சிற்றிலக்கியம் என்பதனைப் பிரபந்தம் என்று அழைப்பர். தமிழில் 96 வகைச் சிற்றிலக்கியங்கள் உள்ளன. பதிகம் என்பது ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுள்கள் பாடுவது. சதகம் னெபது ஒரு பொருளைக் குறித்து நூறு செய்யுள்கள் பாடுவது.

**வினாக்கள்**

i). சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகை

அ). திணைவகை இலக்கியம்

ஆ). காப்பிய வகை இலக்கியம்

இ). சிற்றிலக்கியம்

ஈ). பக்தி இலக்கியம்

ii) நீதி இலக்கியம் தோன்றிய காலம்

அ). முதற் சங்க காலம்

ஆ). இடைச் சங்க காலம்

இ). கடைச் சங்க காலம்

ஈ). சங்கம் மருவிய காலம்

iii) சிற்றிலக்கியத்திற்கு மற்றொரு பெயர்

அ). பதிகம்

ஆ). சதகம்

இ). பிரபந்தம்

ஈ). காப்பியம்

iv) பதிகம் என்பது

அ). ஒரு பொருள் குறித்து நூறு செய்யுள் பாடுவது

ஆ). ஒரு பொருள் குறித்துப் பத்துச் செய்யுள் பாடுவது

இ). பல பொருள் குறித்துப் பத்துச் செய்யுள் பாடுவது.

ஈ). பல பொருள் குறித்துப் பல செய்யுள் பாடுவது

v) நீதி இலக்கியத்தைத் தொடர்ந்து தோன்றியது

அ). திணை வகை இலக்கியம்

ஆ). காப்பிய வகை இலக்கியம்

இ). பக்தி இலக்கியம்
ஈ). சிற்றிலக்கியம்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

திருக்குறளிலே ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாட்டும் 2 அடிகளைக் கொண்டது. இரண்டு அடிகளைக் கொண்ட வெண்பாவுக்குக் குறள் வெண்பா என்று பெயர். இந்நூலின் பாடல்கள் முழுவதும் குறள் வெண்பாக்களால் ஆகியிருப்பதால் இந் நூலுக்கு 'குறள்' என்று பெயர் வந்தது. இதன் சிறப்பைக் குறிக்கத் 'திரு' என்ற அடைமொழி சேர்ந்தது. இதில் உள்ள அதிகாரங்கள் 133. முதற்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களைக் கொண்டது. முதல் நான்கு அதிகாரங்கள் பாயிரம் ஆகும். அதன் பின் இருபது அதிகாரங்கள் இல்லறத்தைப் பற்றிக் கூறுகின்றன. பதின்மூன்று அதிகாரங்கள் துறவறத்தைப் பற்றிக் கூறுகின்றன. ஒரு அதிகாரம் ஊழ்வினையைப் பற்றிக் உரைக்கின்றது.

<u>வினாக்கள்</u>

i). குறள் வெண்பா எத்தனை அடிகளையுடையதாயிருக்கும்?
- அ). மூன்றடிகள்
- ஆ). நான்கடிகள்
- இ). இரண்டு அடிகள்
- ஈ). இரண்டுக்கு மேற்பட்ட அடிகள்

ii). திருக்குறளில் திரு என்பது
- அ). பழமை கருதி சேர்க்கப்பட்டது
- ஆ). சிறப்பு கருதி சேர்க்கப்பட்டது
- இ). வள்ளுவரின் ஊர்ப் பெயர் என்பதால் சேர்க்கப்பட்டது
- ஈ). இரண்டு அடிகள் உடையது என்பதால் சேர்க்கப்பட்டது

iii). முதற்பாலில் மொத்தம்
- அ). 32 அதிகாரங்கள் உள்ளன.
- ஆ). 34 அதிகாரங்கள் உள்ளன.
- இ). 38 அதிகாரங்கள் உள்ளன.
- ஈ). 35 அதிகாரங்கள் உள்ளன.

vi). ஊழ்வினையின் வலிமை பற்றி

அ). 20 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன.

ஆ). 13 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன.

இ). 4 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன.

ஈ). ஒரு அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

v). திருக்குறளில் முதற்பாலின் முதல் நான்கு அதிகாரங்கள்

அ). இல்லறம் பற்றி கூறும்.

ஆ). துறவறம் பற்றி கூறும்.

இ). பாயிரம் ஆகும்.

ஈ). ஊழ்வினையின் வலிமை பற்றி கூறும்.

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

வேட்கையும் விருப்பமும் மனிதனையே ஏன் உலகினையே ஆட்டிப் படைக்கும் சுழற்காற்று சூறாவளி. பொருள் வேட்கை, பொன் வேட்கை, மண் வேட்கை பலவற்றையும் பற்றித் தொல்லை தரும் நச்சரவம். அந் நச்சரவத்திற்கு மேலும் மேலும் பாலூற்றி வளர்ப்பது ஆசை மனமே. அறத்தை அழிக்கத் தொடங்கும் அழி பொருள் எனத் தெரிந்தும் அதனை வெறுக்க முடிவதில்லை. நம்மையும் அழிக்குமென அறிந்தும் நாம் அதனை விட்ட அகல இயலுவதில்லை. ஆசை மிகுதியாக மிகுதியாகப் பிறர் பொருளைக் கவர வேண்டும் என்ற தீரா விருப்பு - தணியா வேட்கை - மனிதனை எப்படியெல்லாமோ அலைக்கழிக்கிறது. 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்' என்பது திருமூலரின் தெய்வத் தாரக மந்திரம். 'வேண்டாமையன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை' என்பது திருக்குறளின் தனிக்குரல். பொருள் உலகை வெறுத்து அருள் உலகை நாடிய அருள் ஞானி, போதி மரத்துப் புத்தர் பிரானின் புனித மொழியும் 'ஆசையறுமின்' என்பதே. 'துன்பத்திற்கு மூலகாரணம் ஆசையே' என்றார் முழுதும் துறந்து முற்றுணர்ந்த அவ்வருள் ஞானி. அறிவின் வழிச் செல்லாது ஆசை வழிச் சென்று அல்லற்படுவது மனித மனம்.

**வினாக்கள்:**

i). அறத்தை அழிக்கத் தொடங்கும் அழிபொருள்

அ). அன்பு மனம்

ஆ). ஆசை மனம்

இ). பக்தி மனம்

ஈ). அருள் மனம்

ii). `அரவம்' என்பதன் பொருள்

அ).பல்லி

ஆ). முதலை

இ). பாம்பு

ஈ). தேள்

iii). முற்றுணர்ந்த ஞானி

அ). புத்தர்

ஆ). திருவள்ளுவர்

இ). திருமூலர்

ஈ). திருநாவுக்கரசர்

vi). மனித மனம் அல்லாடாதிருக்க எதன் வழிச் செல்ல வேண்டும்?

அ). அன்பு

ஆ). ஆசை

இ). பக்தி

ஈ). அறிவு

v). கடவுள் மீது கொண்ட ஆசையையும் அறுமின் எனக் கூறியவர்

அ). புத்தர்

ஆ). வள்ளுவர்

இ). திருமூலர்

ஈ). திருநாவுக்கரசர்

## பகுதி - ஆ (section - B, 20 marks)

1. நடைபாதை கடைகளை அகற்றக் கோரி மாநகராட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதுக. (8)

(அல்லது)

நீ படித்து மகிழ்ந்த நூலைப் பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

★ [உமது முகவரி: சங்கர்/ சங்கரி, 17. கம்பன் தெரு, அயோத்தி நகர், சென்னை - 20 எனக் கொள்க.]

**2. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (8)**

அ). முன்னுரை - அழிவில்லாத செல்வம் - கற்றலின் பயன் - கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு- முடிவுரை.

ஆ). முன்னுரை - நான் விரும்பும் நூல் - திருக்குறள் அமைப்பு முறை - உலகப் பொது மறை - மக்கள் வாழ்வியலுக்கான கருத்துகள் - முடிவுரை.

இ). முன்னுரை - உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - உடற் பயிற்சி - உணவு முறைகள் - சுத்தம் சோறு போடும் - முடிவுரை.

3. உமது பகுதியில் நடைபெற்ற சுற்றுச் சூழல் விழிப்புணர்வு முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக. (4)

(அல்லது)

உமது பள்ளியில் நடைபெற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - இ (section - c 15 marks)

1. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3)

i). ஆய்தக் குறுக்கம்

அ). கல்தீது

ஆ). கஃறீது

இ). கஃதீது

ஈ). கஃரீது

ii). ஒன்றொழிப் பொதுச் சொல்

அ). பெற்றங்கள் பால் சொரிந்தன.

ஆ). காளை வயலில் உழுகிறது

இ). பெண்கள் கோலமிட்டனர்

ஈ). ஆண்கள் போர்க்களம் சென்றனர்

iii). பெயரெச்சம்

அ). படித்து முடித்தான்

ஆ). படித்தான் பையன்

இ). படித்த பையன்

ஈ). பையன் படித்தான்

iv). வினாவெதிர் வினாதல் விடை

அ). பார்

ஆ). பார்ப்பேன்

இ). பாரேன்

ஈ). பார்க்காமல் இருப்பேனா?

v). தெரிநிலை வினை முற்று

அ). உழுதான்

ஆ). பார்த்திலேன்

இ). மாந்தர்

ஈ). உழவர்

**2. நிரப்புக (எவையேனும் மூன்றை மட்டும்)** **(3)**

i). சொல்லுக்கு இடையில் வரும் ஐகாரம் ------ மாத்திரை அளவு குறுகி ஒலிக்கும்.

அ). அரை

ஆ). கால்

இ). ஒன்று

ஈ). ஒன்றரை

ii).ஒரு  சொல் தனித்து நின்று பொருள் உணர்த்துவது ------

அ). பொது மொழி

ஆ). தனி மொழி

இ). தொடர் மொழி

ஈ). ஓரெழுத்தொரு மொழி

iii).அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது ----------

அ). ஏவல் வினா

ஆ). அறியா வினா

இ). கொளல் வினா

ஈ). கொடை வினா

iv).தனக்கு  வரப் போவதை விடையாகக் கூறுவது ----------

அ). உற்றது உரைத்தல் விடை

ஆ). மறை விடை

இ). உறுவது கூறல் விடை

ஈ). நேர் விடை

v). உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப் படுத்திக் காட்டுவது --------

அ). உவமை

ஆ). தொகையுவமை

இ). உருவகம்

ஈ). விரியுவமை

**3. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றை மட்டும்)** **(3)**

i). மருளும் (மகரக் குறுக்கமாக்குக)

அ). மறுளும்.

ஆ). மருண்ம்.

இ). மருன்ம்.

ஈ). மருணும்.

ii). கோதை பாடினாள்(பெயரெச்சமாக்குக)

அ). பாடினாள் கோதை.

ஆ). பாடுகின்றாள் கோதை.

இ). பாடிய கோதை.

ஈ). பாடுவாள் கோதை.

iii). நடந்தேன் (மறைவிடையாக்குக)

அ). நடந்திலேன்

ஆ). நடப்பேன்

இ). நடவேனோ

ஈ). நீயே நட

.iv). மலர்ப் பாதம் (உருவகமாக்குக)

அ). மலர் போன்ற பாதம்

ஆ). பாதம் போன்ற மலர்

இ). பாத மலர்

ஈ). மலரன்ன பாதம்

v). கிளி போன்ற மொழி (உவமைத்தொகையாக்குக)

அ). கிளியொப்ப மொழி

ஆ). கிளி மொழி

இ). கிளியன்ன மொழி

ஈ). கிளியுறழ மொழி

4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்றுக்கு மட்டும்) (3)

i). வந்தனன் நின்றான்

அ). முற்றெச்சம்

ஆ). பெயரெச்சம்

இ). வினையெச்சம்

ஈ). வினை முற்று

ii). படித்துப் பார்த்தான்

அ). குறிப்பு வினையெச்சம்

ஆ). தெரிநிலை வினையெச்சம்

இ). குறிப்புப் பெயரெச்சம்

ஈ). தெரிநிலைப் பெயரெச்சம்

iii). வெற்றிலை மென்றான்

அ). ஒன்றொழிப் பொதுச் சொல்

ஆ). இனங்குறித்தல்

இ). வெளிப்படை

ஈ). அடுக்குத் தொடர்

iv). தேன் தமிழ்

அ). உருவகம்

ஆ). வினை முற்று

இ). பெயரெச்சம்

ஈ). உவமை

v). பாம்போ? கயிறோ?

அ). கொடை வினா

ஆ). ஐய வினா

இ). ஏவல் வினா

ஈ). அறியா வினா

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

i) அ). சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் ஒன்றரை மாத்திரை அளவு ஒலிக்கும்.

ஆ). சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும்.

இ). சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கும்.

ஈ). சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் அரை மாத்திரை அளவு ஒலிக்கும்.

ii). அ). வினைச் சொல் காலம் காட்டாது.

ஆ). வினைச் சொல் வேற்றுமை ஏற்கும்.

இ). வினைச்சொல் எழுவாய் செய்யும் செயலைக் குறிக்காது.

ஈ). வினைச்சொல் காலம் காட்டும்.

iii). அ). அடுக்குத் தொடர் பிரித்தால் பொருள் தராது.
ஆ). அடுக்குத்தொடரில் சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும்.
இ). அடுக்குத் தொடர் அசைநிலையாகவே வரும்.
ஈ). அடுக்குத் தொடர் பிரித்தால் பொருள் தரும்.

iv). அ). உவம உருபு மறைந்து வருவது தொகையுவமை.
ஆ). உவம உருபு மறைந்து வருவது விரியுவமை.
இ). உவம உருபு வெளிப்படையாக வருவது தொகையுவமை.
ஈ). உவம உருபு உருவகமாக மாறி வருவது தொகையுவமை.

v). அ). ஓர் எழுத்து தனித்து வருவது சொல்.
ஆ). பல எழுத்துகள் தொடர்ந்து வருவது சொல்.
இ). ஓர் எழுத்தோ பல எழுத்துகளோ தொடர்ந்து வருவது சொல்.
ஈ). ஓர் எழுத்தோ பல எழுத்துகளோ தொடர்ந்து வந்து பொருள் தருவது சொல்.

## பிரிவு - ஈ (section - D 40 marks)

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக் கண்டம் அவன் பேசிய மொழி தமிழ் மொழியே என்கின்றனர் ஆய்வாளர். அக் குமரிக்கண்டத்தில் முதல், இடைத் தமிழ்ச் சங்கங்கள் அமைந்து மொழியை வளர்த்தனர் தமிழர். மூன்றாவது தமிழ்ச் சங்கம் தென் மதுரையில் தோற்றுவிக்கப்பட்டது. இது மூவாயிரம் ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தது என்பர். காலச் சூழலே மொழிக் கலப்பினை ஏற்படுத்துகின்றது. தமிழிலும் ஆங்கிலத்திலும் எண்ணற்ற பிற மொழிச் சொற்கள் கலந்துள்ளன. தமிழ் இயல், இசை, நாடகம் எனும் முப்பிரிவுகளைக் கொண்டது. தமிழர் அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர். தொல்காப்பியரின் தொல்காப்பியமும் அகத்தியரின் அகத்தியமும் மேற்கூறிய கருத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றன. உலகம் தோன்றிய போதே தோன்றி தமிழை அதன் தொன்மை கருதி 'என்றுமுள தென் தமிழ்' என்பார் கம்பர்.

**<u>வினாக்கள்:</u>**

i). மொழிக் கலப்பிற்குக் காரணம்

அ). காலச் சூழல்

ஆ). அரசியல் சூழல்

இ). இயற்கைச் சூழல்

ஈ). திருமணச் சூழல்

ii). கடைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட இடம்

அ). குமரிக் கண்டம்

ஆ). வட மதுரை

இ). தஞ்சை

ஈ). தென் மதுரை

iii). `தொன்மை' என்பதன் நேர்ப் பொருள்

அ). புதுமை

ஆ). வாய்மை

இ). பழமை

ஈ). முதுமை

iv). குமரிக்கண்டம்

அ). முதல் விலங்கு தோன்றிய இடம்

ஆ). முதல் மனிதன் தோன்றிய இடம்

இ). முதல் மலை தோன்றிய இடம்

ஈ). முதல் கடல் தோன்றிய இடம்

v). அகத்தியமும் தொல்காப்பியமும் எவ்வகை நூல்கள்?

அ). பக்தி நூல்கள்

ஆ). நாடக நூல்கள்

இ). இசை நூல்கள்

ஈ). இலக்கண நூல்கள்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** ***(5)***

மராட்டிய கொங்கண மாவட்டத்தில் 'தபோலி'என்னும் சிற்றூர் உள்ளது. பனி விலகாத காலைப்பொழுதில் வயல் வெளிகளுக்கிடையே

ஒற்றையடிப் பாதையில் சிறவுன் ஒருவன் தாவிக் குதித்து ஓடினான். பின்னாலேயே அவனது தந்தை. அன்று தான் அந்தச் சிறுவனுக்குப் பள்ளியின் முதல் நாள். அதனாலேயே தந்தை, மகன் இருவருள்ளும் அளவு கடந்த மகிழ்ச்சி வெள்ளம். பள்ளியில் சேர்ந்த அடுத்த நொடியிலேயே அச் சிறுவனின் மகிழ்ச்சி வகுப்பறையை விட்டு வெளியேறியது. ஏனெனில், அவனது வருகையை பள்ளியில் எவரும் விரும்பவில்லை. தன்னொத்த மாணவர்களுக்குச் சரி சமமாக உட்காரவும் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதற்கு அவன் சாதியைக் காரணமாக்கினர் கலநெஞ்சினர். அதையும் மீறி, அந்தச் சிறவன் தொடர்ந்து படிக்க விரும்பினான். அதே சிறுவன் ஐம்பது ஆண்டுகட்குப் பின் 1947 - இல் மிடுக்கான உடை அணிந்த மாமனிதராக வந்து நின்றார். இந்தியாவே அவரின் வருகைக்காக நாடாளுமன்றத்தில் கூடி நின்று எதிர்பார்த்தது. அவர் தாம் அண்ணல் அம்பேத்கர். அவர் கைகளில், இந்தியாவின் எதிர்காலத்தையே உருவாக்கும் இந்திய அரசியல் சாசனச் சட்ட வரைவு இருந்தது. 'மக்களிடையே ஒருமைப்பாட்டைச் சீர் குலைப்பது சாதி என்னும் நோயே; இதை அவர்கள் உணரும்படிச் செய்து விட்டால் போதும்; அதுவே எனக்கு நிறைவு தரும்' என்றார் அம்பேத்கர்.

**<u>வினாக்கள்</u>**

i). அம்பேத்கர் எதனை உருவாக்கினார்?

அ). இந்திய பொருளாதார அமைப்புச் சட்டம்

ஆ). இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்

இ). இந்தியக் கல்வி அமைப்புச் சட்டம்

ஈ). இந்தியப் பாதுகாப்பு அமைப்புச் சட்டம்

ii). மக்களின் ஒற்றுமையைச் சிதைப்பது

அ). பணம்

ஆ). அறியாமை

இ). சாதி

ஈ). பொறாமை

iii). தபோலி என்னும் சிற்றூர் அமைந்துள்ள மாநிலம்

அ). தமிழகம்

ஆ). மஹாராஷ்டிரம்

இ). ஆந்திரம்

ஈ). கேரளம்

iv). சிறுவன் குதித்தோடக் காரணம்
அ). சுற்றுலா செல்வதால்
ஆ). தந்தையுடன் செல்வதால்
இ). வயல்களுக்கிடையில் செல்வதால்
ஈ). பள்ளிக்குச் செல்வதால்

v). வகுப்பில் மாணவன் புறக்கணிக்கப்பட்ட காரணம்
அ). ஏழை
ஆ). நோயாளி
இ). கீழ்ச்சாதி
ஈ). முட்டாள்

**3. கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. (4)**

'நிற்றி ஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்ட
சுற்றமும், தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன் ஒருவன்

**வினாக்கள்:**

i). தம்பி - யாரைக் குறிக்கிறது?
அ). இராமன்
ஆ). இலக்குவன்
இ). குகன்
ஈ). கம்பன்

ii). நாவாய் - பொருள் கூறுக.
அ). படகு
ஆ). பறவை
இ). கடல்
ஈ). மீன்

iii). தூயவன், நல்லான் - யார்?

அ). இராமன்

ஆ). இலக்குவன்

இ). குகன்

ஈ). கம்பன்

iv). இக் கூற்று யார் யாரிடம் கூறியது?

அ). இராமன் இலக்குவனிடம் கூறியது.

ஆ). இலக்குவன் இராமனிடம் கூறியது.

இ). இராமன் குகனிடம் கூறியது.

ஈ). குகன் இலக்குவனிடம் கூறியது.

**4. விடையளிக்க. (ஏதேனும் இரண்டனுக்கு மட்டும்) (10)**

அ). பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?

ஆ). அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.

இ). மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

ஈ). தமிழ், செம்மொழிக்குரிய பதினொரு தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளது என்பதை நிறுவுக.

உ). திரைப்படக் கலை உருவான வரலாறு குறித்துக் கட்டுரை எழுதுக.

**5. ஏதேனும் இரண்டனுக்கு விடையளிக்க. (8)**

அ). தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

ஆ). 'தேரா மன்னா' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

இ). அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மேல் கொண்டிருந்த பற்றினை விவரிக்க.

ஈ). காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (8)**

அ). அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

அ). மெல்ல மெல்ல மற - கதையை சுருக்கி எழுதுக.

அ). எம்.ஜி இராமச் சந்திரனைப் பற்றிக் கட்டுரை எழுதுக.